# இந்திய உயர் ஸ்தானிகராலயம்

# கொழும்பு

## ஊடக அறிக்கை

**********************

## இந்திய மீன்பிடி படகுகளை இலங்கையில் ஏலம்விடுதல் தொடர்பான அறிக்கை

இந்திய மீன்பிடிப் படகுகளை இலங்கையில் ஏலம்விடும் செயற்பாடுகள் தொடர்பாக வீரகேசரி பத்திரிகையால் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும் முகமாக பின்வரும் அறிக்கை வெளியிடப்படுகிறது:

"இலங்கையில் இந்திய மீன்பிடி படகுகள் ஏலம்விடப்படுகின்றமை தொடர்பாக வெளியான பல்வேறு அறிக்கைகளும் செய்திகளும் இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் கவனத்துக்கு வந்துள்ளன.

இவ்விடயம் தொடர்பாக இந்திய அரசாங்கத்திற்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையில் இருதரப்பு புரிந்துணர்வு ஒன்று ஏற்கனவே உள்ளது என்பதை முதலில் வலியுறுத்தி கூறுகின்றோம். இந்த புரிந்துணர்வுக்கு அமைவாக இலங்கையில், இயக்க முடியாத நிலையிலுள்ள இந்திய மீன்பிடி படகுகளை அகற்றுவது குறித்த தீர்மானங்களை மேற்கொள்வதற்காக இந்தியாவின் தமிழ் நாட்டைச் சேர்ந்த பிரதிநிதிகள் இலங்கைக்கான விஜயமொன்றை மேற்கொள்ளவிருந்தனர். இலங்கை அரசாங்கத்திடம் இந்த விஜயத்திற்கு தேவையான அனுமதியை உயர் ஸ்தானிகராலயம் மீண்டும் கோரியுள்ளது."

*********

கொழும்பு
09 பெப்ரவரி 2022